# மக்கள் பாதுகாப்புக்கு தொண்டர் சபைகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவையாளர்கள் பிரிவிலும் தொண்டர் சபைகள் அமைக்கப்படும். இவை உதவி அரசாங்க அதிபர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

யாழ்மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்றுவரும் வன்செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கண்டுபிடிக்கவும், பொது மக்களுக்கு பாதுகாப்பளிக்கவும், இத்தொண்டர்சபைகள் பொலிசாருடன் ஒத்துழைப்பதற்கான ஏற்பாடும் செய்யப்படும்.

மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம் தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தினமும் நடைபெறும் கொள்ளைகள், வழிப்பறிச் சம்பவங்கள், தனிநபர்களுக்கு தீங்குவிளைவித்தல், உடமைகளை சூறையாடல், அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் வாகனங்களைக் கடத்தல் போன்றவற்றில் ஈடுபட்டு வரும் கோஷ்டிகளை பிடிப்பதற்கும், பொதுமக்களை பாதுகாப்பதற்கும், சகல கிராம சேவையாளர்கள் பிரிவிலும், உதவி அரசாங்க அதிபரின் காட்டுப்பாட்டினுள், இந்த தொண்டர் சபைகள் அமைக்கப்படும்.

இவர்கள் பொலிசாருடன் ஒத்துழைப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு நேற்று நடைபெற்ற, மாவட்ட இணைப்பு அதிகாரி கூட்டத்தில், சகல உதவி, அர

(8-ம் பக்கம் பார்க்க)

பக்கங்கள் 8. விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆவணி 25 றமழான் 25 இதழ் 210

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10-9-77




# கமிஷன்வைத்து குற்றம்புரிந்தவர்கள் தண்டிக்கப்பட்ட பிறகே வேலைக்குத் திரும்புவர்!

## பாதிக்கப்பட்ட உள்ளூராட்சி ஊழியர்கள் தீர்மானம்

வண்ணார்பண்ணை, வெள்ளி

நாட்டில் நடந்த வன்செயல்கள் தொடர்பாக விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதின் பின்னரே வேலைக்குத் திரும்புவது பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று நேற்று யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் இடம்பெயர்ந்த உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மின்சார அத்தியட்சகர் திரு. பொன். காங்கேயநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தின் மேற்படி ஊழியர் சங்க செயலாளர் திரு மா. குலேந்திரனால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்கப்பட்டது.

இடம்பெயர்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் சங்கத்தை தாய்ச் சங்கமாக ஏற்று அதன் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மின் அத்தியட்சகர் திரு. பொன் காங்கேயநாதன் பேசுகையில் இடம் பெயர்ந்த ஊழியர்கள் நிலைமைகள் பற்றி அரசு முறையான விசாரணை செய்து தீர்வுகாணும் வரை நாம் வேலைக்குத் திரும்புவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இதுபற்றிய விசாரணைகள் முடிந்த பின்னரே நாம் வேலைக்குச் செல்வது பற்றி ஆராய முடியும். நாம் ஒற்றுமையாக எமது நிலையை எடுத்துக் காட்டுவதன் மூலம்தான் நல்ல ஒரு தீர்வைக்காண முடியும். மேலெழுந்த வாரியாக அரசாங்கப் பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும் விடுக்கும் வேண்டுகோள்களை நம்பி நாம் வேலைக்குச் செல்ல முடியாது என்றார்.

டாக்டர் பாலசிங்கம் பேசுகையில் 1958ல் நடந்த கலவரத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதை விட பன்மடங்கு இக்கலவரத்தில் பாதிக்கப்பட்டனர். 58 கலவரத்தின் மீது அரசு சரியான விசா

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வன்முறைகள் பற்றி

## இந்திய பிரதமரிடம் அறிக்கை தாக்கல்

புதுடில்லி, செப். 9

இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் ஸ்ரீ குருபச்சன் சிங் இன்று இந்திய பிரதமரிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்தார்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் பற்றியும் அதனால் தமிழ் இனத்தவர்களுக்கும், இந்திய வம்சாவழியினருக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் பற்றிய விபரம் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளது. ஸ்ரீ குரு பச்சன் சிங் இந்தியாவுக்கு வருமுன் இலங்கையில் பல்வேறு இடங்களிலும் தமிழ் அகதிகள் தங்கியிருந்த இடங்களைப் போய்ப்பார்வையிட்டார்.

# அணிவகுப்பில் எவரும் அடையாளம் காட்டவில்லை

## இளைஞர்களுக்கு தொடர்ந்தும் பிணை

வண்ணார்பண்ணை, வெள்ளி

மானிப்பாய் இலங்கை வங்கிக் கொள்ளை உட்பட ஐந்து சம்பவங்கள் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து வாலிபர்கள் நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

கடந்த மாதம் 18ந் திகதி காரைநகர்க் கடற்படையினரால் கொக்குவில் சந்தியில் வைத்துக் காருடனும் ஆயுதங்களுடனும் கைதுசெய்யப்பட்டதாகக் கோட்டில் ஆஜர் செய்யப்பட்ட அ. பாஸ்கரன், கு. சுந்தரலிங்கம், சி. ஜெயக்குமார், மு.பொ. அந்தோனிப்பிள்ளை, சு. ரவீந்திரன் ஆகிய ஐந்து சந்தேகநபர்களையும் அடையாளம் காட்டுவதற்காக மொத்தம் ஒன்பது சாட்சிகள் அழைக்கப்பட்டனராயினும் ஒருவருமே அடையாளம் காட்

(8-ம் பக்கம் பார்க்க)

## பயிற்சித் திட்டம்

**விவசாயம், மிருகபரிபாலனம், பண்ணை**

நிர்வாகம் என்பவற்றில் ஆண்களுக்கென நடாத்தப்படும் ஒருவருட வாசஸ்தல பயிற்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உணவுக்கான மானியக் கட்டணம் மாதம் ரூபா 50/- பயிற்சியும் தங்கு வசதிகளும் இலவசமாக அளிக்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை முழு விபரங்களுடன் 20-9-77-ற்கு முன்பதாக கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களை நேரில் அல்லது தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**இயக்குனர்,**

**வை. எம் சி. ஏ, இளைஞர் பயிற்சிநிலையம்,**

பரந்தன். 7043



## ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. மாணிக்கம் இராசரத்தினம் அவர்களால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழே விபரிக்கப்படும் சுளிபுரம் - மூளாய் தெற்கு, திரு. வேலாயுதம் தியாகராசா, திருமதி நாகரத்தினம் தியாகராசா ஆகிய இருவரும் 1971 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திரு. க. சேனாதிராசாவால் 9377ஆம் இலக்கத்தில் நிறைவேறிய ஈட்டு உறுதியின் பெயரால் வரவேண்டிய தொகை ரூபாய் 26,874-33 சதமும். 21-10-76 க்குப் பின் இறுபட்ட தொகை நீக்கி மிகுதியையும் 21-10-76 திகதி தொடக்கம் ரூபாய் 18,640-80 சதத்திற்கு வருடமொன்றுக்கு 100-க்கு 11 வீத வட்டியையும் குறிக்கப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடவேண்டிய அபராதத் தொகையையும் அறவிடுவதற்கு ஏற்பட்ட செலவுத் தொகையையும் அறவிடக் கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் (புரட்டாதி) மாதம் 19 ஆம் திகதி (19-9-77) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று மூளாயிறை "பொக்கள் ஒடை" நிலப்பரப்பு 14, ஆனல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எஸ். ஏகாம்பரத்தால் 27-5-59 இல் தயாரிக்கப்பட்ட 689ஆம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு 13, குளி 14 2/10ம், கிணறும், பயிர்களும், புதிதாகக் கட்டிய கல்வீடும். எல்லை: கிழக்கு, சதாசிவம்பிள்ளை வேலாயுதத்தின் உரிமைக்காரருக்கும் சண்முகம் சதாசிவத்திற்குமுரிய ஆதனம். வடக்கு: சண்முகம் சதாசிவத்திற்கும், பொன்னம்பலம் பெண் தங்கத்திற்கும் உரிய ஆதனம். மேற்கு: கிராமசபை ஒழுங்கை. தெற்கு: பிரத்தியேக கையொழுங்கை. இதடங்கலும்.

சி. சங்கரப்பிள்ளை
ஏல விற்பனையாளர்.

தெல்லிப்பழை,
29-6-1977 7012



### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

(1) இராமலிங்கம் கந்தையா (காலஞ்சென்றவர்)
(2) கந்தையா கைம்பெண் நகுலாம்பிகை
சண்டிலிப்பாய்.

வழ: இல. ஈடு/13819

எதிராக வழக்காளி

(1) ஆசீர்வாதம் அருள்தாசனும்
(2) பெண்-மேரி சிசிலியா - இருவரும்
107/2பீச்றோட், யாழ்ப்பாணம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 13819ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுபட்ட கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1977ம் வருடம் செப்ரெம்பர் மாதம் 3ம்- திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 7880/-ம் 7-5-1973 தொடக்கம் 6-2-75 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 577/15 சதமும் இதில் ரூபா 500 கழிக்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை 'ஆவுடையான்காடு' நிலப்பரப்பு ஒன்று (நில. பர. 1) கல்வீடும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு கபிரியேல் ஞானப்பிரகாசத்துக்கும் பெண் அன்ஸ்தியோரிசுவிற்குமுரியவாதனம், மேற்கு சவரிமுத்து செல்லப்பாவின் ஆதனம், தெற்கு றப்பியேல் சயிமனுக்கும் கினறம்மாவுக்கும் உரிய ஆதனம்.

க. சரவணமுத்து
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்

38/1 சோமசுந்தரம் அவெனியூ
யாழ்ப்பாணம், 20-8-77 7033


# பொத்துவில் பிரசாரத்தில் கூட்டணித் தலைவர்கள்

யாழ்ப்பாணம். சனி

பொத்துவில் இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. எஸ். கனகரத்தினத்தின் தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு அ அமிர்தலிங்கம் நல்லூர் தேசியஅரசுப்பேரவை உறுப்பினரும், செயலதிபருமான திரு எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாண தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன், மானிப்பாய் தேசியஅரசுப்பேரவை உறுப்பினர் திரு வி. தர்மலிங்கம், பருத்தித்துறை, மன்னர், கோப்பாய், தேசியப்பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் துரைரெத்தினம். சூசைதாஸன். எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும், வண்ணை ஆனந்தனும், மாவை சேனாதிராஜாவும் பொத்துவில் சென்றுள்ளனர்.

இன்று பொத்துவில்இடைத் தேர்தலின் கடைசிப்பிரசார தினமாகும். இத்தேர்தலில், தமிழர் விடுதலைக்கூட்டணி, ஐ தே க, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியனகட்சிஅடிப்படையிலும் நால்வர் சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர்.

பொத்துவில் இடைத்தேர்தலின் முடிவுகள் மறுநாள் காலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வழமையான சேவைகள் ஆரம்பமான பின்னரே அறிவிக்கப்படுமென்று தேர்தல் பகுதியினர் அறிவித்துள்ளனர். (செ)

## பிரதமநீதியரசர் பதவிப்பிரமாணம் செய்தார்

கொழும்பு, வெள்ளி

திரு. நெவில் சமரக்கோன் கியூ. ஸி. புதிய பிரதமநீதியரசராக இன்று காலை ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டார்.

முன்னாள் பிரதமநீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் பதவியிலிருந்து ஒய்வுபெற்றதையடுத்தே திரு. சமரக்கோன் இப்பதவிக்குநியமிக்கப் பட்டுள்ளார்.

இன்றைய பதவிப்பிரமாண வைபவத்திற்கு திரு சமரக்கோனுடன் நீதியரசர்கள் திருவாளர்கள் ஜி. டி. சமரவிக்கிரம, வில்மட் குணசேகரா ஆகியோரும் சென்றிருந்தனர்.

58 வயதான திரு. சமரக்கோன் கண்டி ரினிட்டி கல்லூரியின் பழையமாணவராவர். (இ)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



## விசேட ஆணையாளர் அலுவலகம், வல்வெட்டித்துறை நகரம்— வல்வெட்டித்துறை

## வரியிறுப்பாளர்களுக்கு பிரதான அறிவித்தல்

1977-ம் ஆண்டு மூன்றும் கந்தாயத்திற்கான ஆதனவரி இம்மாதம் 30-09-1977-ம் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளப்படல்வேண்டும். இதன்பின் செலுத்தப்படாமல் இருக்கும் வரியின் மீது பத்து வீதம் பற்றுணைச் செலவாக அறவிடப்படும்.

இதுவரையுள்ள நிலுவைகளை உடனடியாகச் செலுத்தி உங்கள் ஆதனங்களை நடுக்கட்டல், விற்பனை செய்தல் ஆகிய விருப்பமற்ற நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளவும்.

மேலும் சபையின் வெளியாத்து உத்தியோகத்தர்களிடம் ஆதன நிலுவைகளைச் செலுத்தும்போது சபையின் உத்தியோக பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோபாலசுந்தரம் கந்தசாமி

செயலாளரும்,
விசேட ஆணையாளரும்
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.
07-09-1977. 7040



# POST OF ACCOUNTANT

Chankanai M.P.C.S. Ltd., Chankanai requires the services of an Accountant with following qualifications.

Age Limit: Between 23 — 45 years

Qualifications: Pass in one of the following examinations;

1) Chartered Intermediate Examination,
or 2) Cost and Management Part I, II & III,
or 3) Institute of Certified Accountants Part I, II & III,
or 4) Diploma in Accountancy of the Senior Technicial College Colombo,
or 5) B. Com. Degree,
or 6) A degree with Accountancy as a subject,
or 7) Government Accountant.

Experience: Minimum 3 years experience is essential.

Salary: Negotiable.

All applications must be sent to the President Chankanai MPCS Ltd, Chankanai, on or before 24-09-77, under registered cover. 7041



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

5ஸ்ரீ தொடர்பிலக்க B.S A. மோட்டார் சைக்கிள் 250 CC. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. V. N. கமலகாந்தன் இல: 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், 7038

### தவறிவிட்டது

Q 765505 இலக்க(ஆ. துரைராஜா) கூப்பன் புத்தகம், ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சாமுவேல் அன்சன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7045

### வகுப்புக்கள்

லண்டன் (சிற்றி-கில்ட்ஸ்) எலெக்றிக்கல் என்ஜினியறிங் புதியபாடத்திட்டங்களின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7032

### இனம்

நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர காட்சிச்சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த இனம் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து இனம் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6989

### CLASSES

Rapid Revision classes for A/L April 1978 Exam. Science Subject only Classes Commencing - 9th Sept. 1977. Director, Science Centre, Karaveddy. 6997

### CLASSES

Rapid Revision Classes for H. N. C. E. & A. L. April 1978 Exam Arts & Commerce Classes commencing - 9th Sept 1977. Director, Modern Education Centre, Karaveddy. 6996

### CO-OPERATIVE HOSPITAL SOCIETY Ltd. Moolai, Chulipuram

Wanted the following Medical Officers:

(a) An experienced Senior Medical Officer preferably with Post Graduate qualifications to function as Medical Superintendent.

(b) A Medical Officer with experience in Anaesthesia.

They should be resident at the hospital, where free unfurnished quarters would be provided. Salary negotiable.

Apply on or before 21-9-77.

Chairman.
7000

# மயக்க நிலையில் இடி அமீன்

கம்பாலா, செப். 9

உகண்டா அதிபர் ஜெனரல் இடிஅமீன் சத்திரசிகிச்சைக்குப் பின் நீண்டநேரமாக மயக்கம் தெளியாத நிலையில் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின் இன்று காலைவரை அவர் மயக்கம் தெளியாமல் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

இடிஅமீனின் சத்திரசிகிச்சைக்கான காரணம்பற்றிடாக்டர்கள் எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

கம்பாலாவில் உள்ள ரஷ்ய தூதுவர், தூதரக அதிகாரிகள் ஆகியோருடன் நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரிக்குச் சென்ற இடிஅமீனுக்கு ரஷ்ய டாக்டரே இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டார். (இ)

## சோமாலிய — எதியோப்பிய ராஜரீக உறவு துண்டிப்பு

அடிஸ்அபாபா, செப். 9

எதியோப்பியா சோமாலியாவுடனுன ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துள்ளது.

எதியோப்பியாமீது சோமாலியா தாக்குதல் நடத்திவருவதை அடுத்தே எதியோப்பியா இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

அத்துடன் தமது நாட்டில் உள்ள சோமாலிய தூதரக அதிகாரிகளை 48 மணி நேரத்துக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படியும் எதியோப்பிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதை அடுத்து சோமாலியாவிலிருந்து எதியோப்பிய தூதுவரை சோமாலியா எதியோப்பியாவுக்கு நாடு கடத்தியுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (இ)

# தமிழர் புனர்வாழ்வுச் சபை சிறுகைத்தொழில்களை நிறுவும்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் சிறுகைத்தொழில் துறையில் மக்களை ஊக்குவித்து உடனடியாக சில கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான தீவிர முயற்சிகளைப் பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச்சபை மேற்கொண்டு வருகின்றது,

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு குழுவின் திட்டச் செயலாளர் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலமும், யாழ். மேற்றல் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஆர். இராஜலிங்கமும் வேறுபட்ட பலதுறைகளிலும் நிபுணத்துவம்பெற்ற கைத்தொழில் நிபுணர்களும், பல பொதுநல நிறுவனங்களும் யாழ்ப்பாணத்தில்உடனடியாக சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இத்திட்டத்தின்மூலம் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வடபகுதியில் முகாமிட்டிருக்கும் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பைப் பெறமுடியும் என சபை நம்புகின்றது.

தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான மூலதனங்களை திரட்டுவதற்கு யாழ். லயன்ஸ் கழகம். ரோட்டரிக் கழகம் கத்தோலிக்க திருச்சபைகள் கிறிஸ்தவ மத ஸ்தாபனங்கள் ஆகியன வெளிநாட்டின் உதவியையும், தொழில் நுட்ப ஆலோசனைகளையும் பெறுவதற்கு முயன்றுவருகின்றன, (கெ-இ)

## 11,883 பேர் டிக்கட் இன்றி ரயில் பயணம்

சென்னை, செப். 9

தென்இந்திய ரயில்வேப் பகுதியில் சேவையிலீடுபட்ட ரயில்களில் 10 நாட்களில் 11 ஆயிரத்து 883 பேர் டிக்கட் இன்றி பிரயாணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 21-ம் திகதி முதல் 31-ம் திகதி வரை நடைபெற்ற திடீர் பரிசோதனையின்போதோ இவர்கன் அகப்பட்டனர். இவர்களில் 161 பேர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். (இ)

# இலங்கையில் முதலீடுசெய்ய வெளிநாடுகள் விருப்பம்

கொழும்பு,வெள்ளி

இலங்கையில் தொழில் துறைகளில் முதலீடுசெய்ய பல வெளிநாடுகள் முன்வந்துள்ளன.

இதுதொடர்பாக பலவெளிநாட்டுப்பிரதிநிதிகள் கைத்தொழில் அமைச்சர் திரு.சிறில் மத்யூவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## நியமனம்

கொழும்பு,வெள்ளி

சட்டத்தரணியும், கவிஞருமான திரு. யு. ஏ. எஸ். பெரேரா அரச திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவராகநியமிக்கப்பட்டுள்ளார். (உ)

# பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியருக்கு பாரபட்சம்: பேரவையில் குரல்எழுப்ப 'அமிரு'க்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

பாதிக்கப்பட்ட அரசாங்க, அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பளம், கடமைலீவு, இடமாற்றம் ஆகியன வழங்குவதில் அரசாங்கம் பாரபட்சம காட்டி வருகிறது என்றும் ஆகவே இவ்விடயத்தை தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்குமாறும் பாதிக்கப்பட்ட தமிழ ஊழியர் சங்கம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கோரியுள்ளது.

இதுதொடர்பான மகஜர் ஒன்றை பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் சங்கத் தலைவர் டாக்டர் கே.பாலசிங்கம் திரு. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள ஆசிரியர்களுக்கு இம்மாத முடிவுவரை கடமைலீவு அளிக்கப்பட்டு அவர்களுடைய முழுச் சம்பளமும் சுயவிலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஆனல் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 12ம் திகதிவரை கடமைலீவு வழங்கப்பட்டு 50 வீதமான சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளாக இருந்தசீமெந்து கூட்டுத்தாபன சிங்கள ஊழியர்களுக்கு 200 ரூபாமுற்பணம் வழங்கப்பட்டதோடு கொழும்பில் அவர்களுக்கு முழுச்சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களில் சிலருக்கு வட்டியில்லாக்கடனுக 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமைபுரிந்த சிங்கள ஊழியர்கள் அனைவரும் புத்தளம், காலி, கொழும்பு தலைமைக் காரியாலயம் ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆனல் தமிழ் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 40 வீதமான சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியான பாரபட்சமான நடவடிக்கைகளை தேசிய அரசுப்பேரவையில் குரல் எழுப்பும் பட்சத்தில் இனபேதமற்ற முறையில் சகல ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமென நம்புகிறோம்.

இச்சங்கம் கடந்த 3-ம்திகதி றிம்மர் மண்டபத்தில் கூடி எடுத்த தீர்மானங்களை கௌரவ பிரதம மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கும், யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. ருத்திரா இராஜசிங்கத்துக்கும் அனுப்பிவைத்துள்ளது. (கெ-உ)

## செவ்வாய் கூடுவர்

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து வடபகுதி திரும்பியுள்ள கொழும்பு வளாக கலை,கல்வி சட்டபீட மாணவர்கள் தம் எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராயும் பொருட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரியில் கூடவிருக்கின்றனர்.

சகல வளாகங்களையும் சேர்ந்த மாணவப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவிருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டது. (உ)

## மாட்டை துப்பாக்கியால் சுட்டாராம்

மன்னர், வெள்ளி

மாடு ஒன்று துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாகமன்னர் பொலிசார்சந்தேகத்தின்பேரில் ஆர். விநாயகமூர்த்திஎன்பவரைக் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

அவர்மன்னர் பதில் நீதிபதி திரு.ஏ. சிமாம்பிள்ளை முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவரைப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். (உ)

## யாழ். நகர் அசம்பாவிதங்கள்:

# "நேரில் கண்டவர்கள் என்னைச் சந்தியுங்கள்"

### யாழ். எம்.பி. யோகேஸ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். நகரில் சமீபத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு, கொள்ளைகள், தீவைத்தல் முதலான சம்பவங்களை நேரடியாகக் கண்டவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

12-ம் திகதி முதல் 17-ம் திகதிவரை காலை 9-00 மணி முதல் பகல் 12-00 மணிவரையும், பிற்பகல் 3-00 மணி முதல் 5-00 மணிவரையும் மேற்படி சம்பவங்களை நேரில் கண்டவர்கள் பருத்தித்துறை வீதியில் 12-ம் இலக்கத்தில் உள்ள தமது இல்லத்தில்வந்து தம்மைச்சந்திக்குமாறு திரு. யோகேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

"மனிதாபிமானமற்ற விதத்தில் இத்தகைய குற்றங்களைப் புரிந்து அப்பாவி மக்களை இம்சித்த கல்நெஞ்சர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு, சம்பவங்களை நேரடியாகக் கண்டவர்கள் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது பேருதவியாக அமையும்" என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (கி-உ)

## திருட்டு

சங்கானை, வெள்ளி

மானிப்பாய் கோவிற்பற்று ப, நோ. கூ. சங்கத்தின்கீழ் இயங்கிவரும் சண்டிலிப்பாய் கிளையில் சுமார் 2,500 ரூபா பெறுமதி வாய்ந்த வெற்றுச் சாக்குகள் திருடப்பட்டுள்ளன.

சங்கத்தின் கதவை உடைத்து இனம்தெரியாத நபர்களால் திருடப்பட்ட இச்சம்பவம்பற்றி சங்கானைப் பொலிஸ் சார்ஜன்ட் எஸ்.சரவணமுத்து விசாரணையில்ஈடுபட்டுள்ளார். (உ)

## "துப்பாக்கிகளை ஒப்படைக்கவும்"

சங்கானை, வெள்ளி

வலிகாமம் மேற்குப் பிரிவில் லைசென்ஸ் துப்பாக்கிகள்வைத்திருப்போர் அவற்றை சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கும் வண்ணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப்-இன்ஸ்பெக்டர் எஸ். இராசையா கோரியுள்ளார். (உ)

## முன்னாள் எம். பி. க்கு பிணை மறுப்பு

கம்பளை, வெள்ளி

துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் எம். பி. திரு. டி. எம். ஜயரத்ன உட்பட 15 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் எம். பி. வீட்டுக்கு முன் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச்சம்பவம் தொடர்பாகவே திரு. ஜயரத்னவும் மற்றும் 15 பேரும் கைதுசெய்யப்பட்டு காவலில்வைக்கப்பட்டிருந்தனர்.

கம்பளை மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. எம். டபிள்யூ. ஆர். சில்வா முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி இவர்களை பிணையில் விட மறுத்துவிட்டார். (இ)

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

# அறவழியே நம் உய்வுக்கு வழி

'முற்பகல் செய்தது பிற்பகல் விளையும்'. இது பரம்பொருளின் அழிக்கமுடியாத நியதி என்று நல்லறிவாளர் சொல்லி வைத்து மக்கள் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ அரண் செய்தனர். இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்தலட்டில் அவர்கள் 1948-ம் ஆண்டு தொடக்கம் சொல்லொணுத் துன்பத்துக்கு உள்ளாகிவருவது எங்களையெல்லாம்படைத்த இறைவனுக்குத் தெரியாததொன்றல்ல அறவழியே தமது உய்வுக்கும் விடுதலைக்கும் உறுதியான தெப்பம். இதனை நம் மக்கள் குறிப்பாக இளைஞரும் யுவதிகளும் முக்கியமாக மனத் திருத்தி, எங்கள் இருதயத்தைச் சுத்தமான ஆலயமாகப் பக்குவமாக்கி குறிக்கோளை அடைய அயராது செயற்படுவது தமிழனைப்பிறந்த ஒவ்வொருவரது நீங்காக் கடமையுமாகும்.

அழிவுப்பாதையை விட்டுச் சுயபாதுகாப்பைப் பேணி மாற்றூர் எதுசொலினும் நமது புனித நோக்கம் நிறைவேற, நாமும்வாழ ஏனையோரும்வாழ இந்தச் சோதனைமத்தியில் எங்கள் பெரியோரும் நல்லோரும் இளைஞர்களும் தாய்மாரும் சகோதரிகளும் சபதம் செய்வோமாக. நாம் தர்மமுறையை அனுஷ்டிப்போமானுல் எந்த ஈனச் சக்திகளும் எம் இனத்தை அடிமைப் படுத்த முடியாது.

அறமே எங்கள் ஆயுதம். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும். சுதந்திரமே எமது குறிக்கோள். அறம் வளர்க; நீதிசெல்க; சத்தியமே துணை.

சி. பெரியதம்பி
துன்னலை தெற்கு,
கரவெட்டி.

## விசேட ஆணையாளர்

மாவிட்டபுரம், வெள்ளி

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா மல்லாகம், தெல்லிப்பளை கிராமசபைகளின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்ற இவர், தெல்லிப்பளை ப. நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் நியமனம் பெற்றார். (உ)

## "ஆன்மீகப்பற்றின்மையே இன்றையதுன்பத்திற்குக் காரணம்"

மட்டுவில், வெள்ளி

"தமிழர் நலனுக்காக நவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டியது இந்துக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்

இன்று ஈழம்வாழ் தமிழினம் நலன்பெற இந்த நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கவேண்டிய கடப்பாடு ஒவ்வொரு இந்து சமயத்தவருக்கும் உண்டு" என்று நாவுட்டான் ஸ்ரீசெல்வ முத்துமாரி அம்பாள் சைவ மகாசபைத் தலைவர் திரு சின்னையா விளைவேலி மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையினரின் கூட்டத்தில் பேசும் போது கூறினார் திரு சின்னையா தொடர்ந்து கூறியதாவது:-

"கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை தமிழன் தமது பெரும்பேறுகளாகப் போற்றிப் பேணிவந்தான் இம்மூன்றிற்கும் அவன் திரிசக்திகளைக் கொண்ட நவராத்திரி வீரதத்தை அனுஷ்டித்தான். அவன் ஆத்மீக சக்தியை நம்பினன். ஆத்மீக சக்தியைப் பெரிதும் வளர்த்தான். நவராத்திரி விழாவை ஒன்பது தினங்களும் பக்தியோடு கொண்டாடி, விரதமும் அனுஷ்டித்தான். ஆனல் இன்றோ தமிழன் தனது கலை, கலாசார, மத விஷயங்களில் பற்றற்ற நிலைக்கு வந்துவிட்டான். அதன்காரணமாக எமக்கு இன்று இத்தனை இன்னல்களும் சூழ்ந்துள்ளன." (அ)

## இ...

# 1,700 ... தென்னில...

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் இருந்து இராணுவ பாதுகாப்புடன் சீமெந்து தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையில் தனியாருக்கானசீமெந்து விநியோகம் தற்...

பாதிக்கப்பட்டவர்களுக்கு தெல்லிப்பழை

# ப. நோ. கூ. சங்க ஊழியர் ரூ.60 ஆயிரம் வழங்குவர்

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை ப.நோ கூ. சங்க ஊழியர்கள் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 60ஆயிம் ரூபா வழங்க முடிவு செய்துள்ளனர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் தொழிற் சங்க விசேட கூட்டம் ஒன்று சங்கமண்டபத்தில் நடந்த சமயம் சங்க ஊழியர்கள் சகலரும் கலந்து கொண்டனர்.

திரு.சின்னத்துரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் நலன் கருதி புனர்வாழ்வு அளிக்க உதவிசெய்யும் வகையில் சகல தொழிலாளர்களும் தம் ஒருமாதச் சம்பளத்தை வழங்குவதென முடிவு செய்துள்ளனர்.

மேற்படி சகல தொழிலாளர்கள் ஒருமாதச்சம்பளம் ஒன்றுசேர்த்தால் 60ஆயிரம்ரூபா சேரும் என்றும், தொழிலாளர்களில் இருந்து சம்பளப்பணம் மாதாமாதம் குறிப்பிட்ட தொகைவிதம் கழிக்கப்படும் என்றும் சங்க முகாமையாளர் திரு.சி நவரத்தினம் தெரிவித்தார். (உ)

## வங்கி ஊழியர் உதவி

யாழ்ப்பாணம், சனி

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்காக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் யாழ். கிளை ஊழியர்கள் 413 ரூபா 60 சதத்தை "தமிழர் புனர்வாழ்வுச் சபை"யிடம் கொடுத்துள்ளனர். (கெ-இ)

## இன்று கூடுகின்றனா

யாழ்ப்பாணம், சனி

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத்தின் ஆதரவில் இன்று கல்லோயா அபிவிருத்திச் சபை ஊழியர்களின் கூட்டம் ஆனைப்பந்தி உயர் கல்லூரி மண்டபத்தில் காலை 10-00மணிக்கும் தனியார் துறை ஊழியர்களின் கூட்டம் நாவலர் வீதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கப்பணிமனையில் மாலை3-30க்கும் நடைபெறும்.

உடுப்பிட்டி, பருத்தித்துறை பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஊழியர்களின் கூட்டம், நெல்லியடி மத்தியகல்லூரியில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும். (கெ-இ)

## "நியாய விலையில் தரமான துணிகள் விரைவில் கிடைக்கும்"

கொழும்பு, வெள்ளி

"இந்நாட்டுமக்கள் விரைவில் தரமான துணிவகைகளை நியாயவிலையில் பெற்றுக் கொள்ள முடியும்" என்று பிரதி உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். ராஜகருணு கூறினர்.

கிரிந்திவெலயில் நடைபெற்ற சமய வைபவம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் இவ்வுறுதிமொழியை அளித்தார்.

மக்கள் சில யார் துணிகள் வாங்குவதற்காக ஒரு கிராம சேவகருக்கோ, ஒரு காரியாதிகாரிக்கோ அல்லது மற்ற உத்தியோகத்தர்களுக்கோ, பின் செல்லும் அவலநிலைநீக்கப் படும் என்றும் கூட்டுறவுக் கடைகள் மூலம் மக்கள் போதுமான துணிவகைகள் பெறநடவடிக்கைகள் எடுக்கப் படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் சொன்னார். (உ)

## வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் மின்சக்தி அமைச்சின் கீழுள்ள ஆள்புல வேலைகள் பிரிவு பொறியியல் தொழிற் சங்கம் தமது அங்கத்தினர் எல்லோரையும் இன ஒற்றுமைக்குப் பாடுபடும்வண்ணமும், வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறும் சங்கச் செயலாளர் திரு. செ. விஜயரட்னமும், உப தலைவர் ஜி. ரணசிறியும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கெ-இ)

## ஒரு வேண்டுகோள்

தற்பொழுது உள்ள நிலையில் நிலைமையை மேலும் மோசமாக்காமல் இருப்பதற்கு பின்வரும் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன்.

நல்லதொரு குறிக்கோளை அடைய விரும்பும் எவரும் தம்முள் நிறைய ஆன்மீக ஆற்றலை எழுப்பி ஆகவேண்டும். இளைஞர்கள் பின்வரும் மூன்று விடயங்களையாவது கடைப்பிடிக்க வேண்டும்.

(1) தமது தற்பாதுகாப்பைத் தவிர்ந்த வேறெரு காரணத்திற்கும் இரத்தம் சிந்தேல் என்ற அஹிம்சாதர்மம்.

(2) அரசாங்க உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்காமை என்ற பெருநோக்கு. இச்சேதங்களால் ஏற்படும் நஷ்டம் முடிவில் எம் ஒவ்வொருவரையும் எந்த ஒரு சிறிய அளவிலேயாவது தாக்கியேயாகும்.

(3) மதஸ்தாபனங்களில் கையே வைக்காமை. மக்களின் உணர்ச்சிகளைப் பயங்கரமாகத் தூண்டுவது இது.

'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்ற முதுமொழி எமக்குச் சாந்தத்தைத் தருவதாக.

க. சுந்தரலிங்கம்
நல்லூர். (அ)

கண்டியில் ஏற்பட்ட கலவரங்கள்:

# முன்னுள் பிரதி அமைச்சர் உட்பட 25 பேருக்கு தலா 1000ரூபா பிணை

கண்டி, வெள்ளி

சமீபத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மாஜி பிரதி அமைச்சர் உட்பட 25-பேரை தலா 1000 ரூபா பிணையில் செல்வதற்கு கண்டி நீதிபதி திரு. எம். அமீன் அனுமதி வழங்கினர்.

ஜனவரி மாதம் 9-ம் தகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென இவர்களுக்கு நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மாஜி விவசாயப் பிரதி அமைச்சர் எச். எம். நவரத்ன உட்பட ஐந்து சந்தேகநபர்கள் தாம் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டு பிணை கோரி கோர்ட்டில் செய்து கொண்ட மனு ஒன்றையடுத்து கண்டி பொலிஸ் அதிபரையும் அரசாங்க வழக்குத் தொடுநரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சுப்ரீம்கோட் ஏற்கனவே பணித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கு நேற்றுமுன் தினம் கண்டி நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்த போது மீண்டும் பிணை அனுமதி சந்தேகநபர்கள் தரப்பில் கோரப்பட்டது கண்டி உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. பி. செனிவரத்ன தாம் பிணைக்கு அனுமதிமறுக்கவில்லை எனக் கூறி ஆனல் சந்தேகநபர்கள் சாட்சிகள் விடயத்தில் தலையிடாவண்ணம் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்றும் நீதிபதியிடம் தெரிவித்தார். அத்துடன் இவர் கலவர நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரினர். நீதிபதி இதனையடுத்து பிணை அனுமதி வழங்கினர்.

## பஸ் — லொறிவிபத்து: அறுவர் மரணம்

உடுகம, வெள்ளி

உடுகமையில் நடைபெற்ற பயங்கர பஸ் - லொறி விபத்து ஒன்றில் அறுவர் மரணமாகினர்.

ஹினிதூம ஆஸ்பத்திரியில் இருவரும் காலி ஆஸ்பத்திரியில் நால்வரும் மரணமானர்கள்

ஹினிதூம, காலி மரணவிசாரணை அதிகாரிகள் விசாரணையின்பின் விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தனர். (உ)

## யாழ். நகரில் குமார்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்திற்கு சென்று முகாங்கள் பலவற்றிலிருக்கும் அகதிகளை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

திரு குமார் பொன்னம்பலம் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும் முக்கிய மந்திரிகளுடனும் தென்னிலங்கையில் சமீபத்திய கலவரங்களினுல் பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சந்தித்து உதவிய பின்னர் இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளார். (கூ-உ)

"தமிழருக்கு அவல நி...

## எதிர்காலத்திலு... நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

'அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களினுல் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பெரிதும் கவலை தெரிவிப்பதுடன் இவ்வாறுன அவலநிலை எதிர்காலத்திலும் ஏற்படாத முறையில் இவர்களுக்கு அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்' என்று அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையினர் தம்து நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

மேலும் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு மூலகாரணமாக இருந்தவர்களை இன மத வேறுபாடற்ற முறையில் விசாரணை செய்து தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கணிசமான நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், நாட்டில் நிலவுகின்ற பதட்டநிலைமையை உடன் சீரான நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும்

இராணுவ பாதுகாப்புடன்

# 1,700 தொன் சீமெந்து தென்னிலங்கை சென்றது

மாவிட்டபுரம், வெள்ளி காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலையில் இருந்து இராணுவ பாதுகாப்புடன் சீமெந்து தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையில் தனியாருக்கான சிமெந்து விநியோகம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு அரசாங்க கட்டிடங்களுக்குமட்டுமே சிமெந்து விநியோக்கும் நடைமுறை கடந்த 6ம் திகதி முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது.

தம்புலவில் நடைபெறும் ஆற்றுப்பள்ளத்தாக்கு வேலைகளுக்காக 1700 தொன் சிமெந்து அரசுவாகனங்கள் மூலம் நேற்று பலத்த இராணுவ பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது. (உ)

## பலியானவர் இவர்தான்

யாழ்ப்பாணம், சனி வவனிக்குளம் துப்பாக்கிச சூட்டில் இறந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பெயர் திரு. கா. பாலசுந்தரம் என்றும் கா. பாலகிருஷ்ணன் அலல என்றும் அறிவித்துள்ளார்கள். (கெ-அ)

## அகதிகளுக்கு உணவளித்தனர்

யாழ்ப்பாணம், சனி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தங்கியிருக்கும் பாதிககப்பட்ட தமிழ மக்களுக்கு சாவகச்சேரி முஸ்லிம்கள் நேற்றைய தினம் உணவளித்தனர். ஜனாப்கள், எம். பி. கமால், எம். இக்பால், ஆகியவர்களின் இந்தப் பணியை அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கம் பாராட்டியுள்ளது.

## 43,000, தண்டம்

கொழும்பு, வெள்ளி 134 நைலக்ஸ் சாறிகளை சிங்கப்பூரில் இருந்து சூட்கேஸ் ஒன்றினுள் வைத்து இலங்கைக்குள் கடத்த முயன்றதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவருக்கு 43,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (உ)

## கடனுதவி

புதுடில்லி, செப். 9 பாரதத்திற்கு உலக வங்கி 50 கோடியே 80 லட்சம் டொலர்களைக் கடனாக வழங்கியுள்ளது. (உ)

## இன்று சோமஸ்கந்தக்கல்லூரி ஸ்தாபகர் நினைவுதினம

யாழ்ப்பாணத்திலே தமிழ் வளர்த்த தாத்தா சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் சிறப்புற்ற சிறுப்பிட்டி என்னும் சிற்றூரிலே சிற்றம்பலம் மழவராயருக்கும் சின்னத்தங்கச்சிப்பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வனாய் 10-9-1887-ல் திரு. கந்தையா அவதரித்தார்

இவர் தாம் ஈட்டிய பொருட்கள் யாவும் அறவழியிலன்றி அவமாகச் செய்யக்கூடாது என்னும் நோக்கத்தை உடையவராய் இருந்தார். இதனால் தான் தன் நாட்டின் எதிர்காலச் சிற்பிகள கல்விச் செல்வம் பெற்றுக்கொள்ள புத்தூரில் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியையும, பசிநப நாட்டு ஏழைகளிடம காணப்படக்கூடாது என்பதற்காக அன்ன சத்திரத்தையும் மக்கள் யாபேரும் தெய்வபத்தி உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதற்காகச் சிவாலயத்தையும் அருகருகே அமைத்துப் பல லட்சம் பெறுமதியுள்ள சொத்துக்களை தர்மசாசனமாக அவற்றிற்கு எழுதியும் வைத்தார் பாடசாலையிலும் கோவிலிலும் நால்வர் குருபூசை, கந்தசஷ்டிவிரததினம், பாடசாலை அத்திபாரதினம், வித்தியாரம்பதினம் ஆகிய தினங்களில் சிறப்பாக அன்ன தானமும் வஸ்திர தானமும் செய்தார். இந்தியாவிலுள்ள திருச்செந்தூர், சிதம்பரம், இராமேஸ்வரம் போன்ற ஆலயங்களுக்குப் நிதிஅனுப்பி வைத்தார். இவற்றுடன நில்லாது மானிப்பாய் ஆஸ்பத்திரி நோயாளர் தங்க அறையும் அமைத்துக் கொடுத்தார்.

இலவசக்கல்வியின் தந்தையாகிய திரு. கன்னங்கரா, இலங்கையில் இலவசக்கல்வியைப் புகுத்த முனபே திரு. கந்தையா ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரிலைய அமைத்து இலவசக் கல்வியைப் புகட்டினர்.

நாவலரின் கொளகையைப் பின்பற்றி ஓர் உத்தமனாக வாழ்ந்த இத் திருமகனின் நினைவு நாளை இன்று ஸ்ரீசோமஸ்கந்தக்கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் கொண்டாடுகின்றனர்.

-செல்வி தி. வள்ளிநாயகி

## லையில் தரமான ரைவில் கிடைக்கும்"

போதுமான துணிவகைகள் பெறநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் சொன்னார். (உ)

## வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் மின்சக்தி அமைச்சின் கீழுள்ள ஆள்புல வேலைகள் பிரிவு பொறியியல் தொழிற் சங்கம் தமது அங்கத்தினர் எல்லோரையும் இன ஒற்றுமைக்குப் பாடுபடும்வண்ணமும், வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறும் சங்கச் செயலாளர் திரு. செ. விஜயரட்னமும், உப தலைவர் ஜி. ரணசிறியும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கெ-இ)

"தமிழருக்கு அவல நிலை

## எதிர்காலத்திலும் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கவும்"

யாழ்ப்பாணம், சனி 'அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பெரிதும் கவலை தெரிவிப்பதுடன் இவ்வாறான அவலநிலை எதிர்காலத்திலும் ஏற்படாத முறையில் இவர்களுக்கு அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்' என்று அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையினர் தமது நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

மேலும் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு மூலகாரணமாக இருந்தவர்களை இன மத வேறுபாடற்ற முறையில் விசாரணை செய்து தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கணிசமான நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், நாட்டில் நிலவுகின்ற பதட்டநிலைமையை உடன் சீரான நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சபையினர் தீர்மானங்கள் நிறைவேற்றி பிரதமருக்கும் நீதி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளனர் (கா-உ)

## இடமாற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் ஜனவரிமுதல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யபபட்டுள்ளார்.

அங்குமாவட்ட நீதிபதியாகக் கடைமைபுரியும் திரு. எஸ். ஆனந்த குமாரசுவாமி மல்லாகம் நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளார். (உ)

## இன்று

யாழ்ப்பாணம், சனி நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவ தினங்களின் பூசை நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன. இன்று நடைபெறும் காலைப் பூஜை 6-45க்கும் தெண்டாயுதபாணி உற்சவம் காலை 8-00 மணிக்கும் நடைபெறும். (கெ-இ)



# தொல்புரம் ஆசிரியர்கொலை: ஐவர் றிமாண்டில்

மாவிட்டபுரம், வெள்ளி

தொல்புரம் மேற்கு ஆசிரியர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தது தொடர்பாக ஐந்துபேர் மல்லாகம் நீதிபதி முன் சரண்புகுந்துள்ளார்கள்.

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த கல்லூரி ஆசிரியரான எஸ். நடராசா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தது தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்ட எஸ் மகாலிங்கம், எஸ். சிறிதரன், எஸ்.முத்துலிங்கம் ஆகியோர் சட்டத்தரணி திரு. சபாநாயகம் மூலமும், ஆ. மகாதேவன், சி நாகராசா ஆகியோர் சட்டத்தரணி திரு ஜே. செல்வரத்னம் மூலமும் மல்லாகம் நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிபதி இந்த ஐந்து நபர்களையும் இம் மாதம் 21ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (அ)

## புதிய டிராக்டர்கள் இறக்குமதி

கொழும்பு, வெள்ளி

உழவு யந்திரக் கூட்டுத்தாபனம் 1386 புதிய டிராக்டர்களை இறக்குமதிசெய்யவிருக்கிறது.

இதற்கான பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் கூட்டுத்தாபனம் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளது

இவை இம்மாத இறுதிக்குள் கொழும்புவந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## கடன்தொல்லை: விவசாயி தற்கொலை

மாவிட்டபுரம், வெள்ளி

கடன்தொல்லை தாங்கமுடியாது நஞ்சருந்தி ஒருவிவசாயி தற்கொலை செய்து கொண்டார். இச்சோகசம்பவம் தெல்லிப்பளையில் நடைபெற்றது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த நாகமுத்து நடராசா(55வயது) என்ற இவ்விவசாயியின் மரணம் குறித்து தெல்லிப்பளை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தம்பிராசா விசாரணை நடத்தினர்.

காலமானவர் கடன்பெற்று வீடுகட்டியதாகவும், தோட்டம்செய்யக் கடன்பெற்றதாகவும் இவற்றைத் திருப்பிக் கொடுக்க முடியாது மனம் உடைந்து காணப்பட்டதாகவும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## எதிர்காலம்

யாழ்ப்பாணம், சனி

கடல்கடந்த தந்திச்சேவையில் கடமையாற்றிக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் இன்றுகாலை யாழ். வின்ஸர் தியேட்டர் மேல்மாடியில் தமது அடுத்தநடவடிக்கை பற்றி ஆராயவுள்ளனர். திரு. சண்முகராஜா தலைமைவகிப்பார்.

பொது சுகாதார பரிசோதகர் சங்க யாழ். கிளை நாளைக்காலை யாழ். மாவட்ட சுகாதாரப் பகுதி மேற்பார்வையாளரின் இல்லத்தில் கூடுகின்றனர். அகதிகளாக வந்த சகல சுகாதரப் பரிசோதகர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டிதன் அவசியப் பற்றிச் செயலாளர் திரு. இ வேலுப்பிள்ளை கடிதமூலம் எல்லாருக்கும் விளக்கியுள்ளார். (கி-அ)


∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான

வைத்திலிங்கம்ஸ்

இரும்பு — பித்தளை — மரஸ்குறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143 — 4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


# கூட்டுறவுப்பணியாளர்கள் ஒருமாதசம்பளம் வழங்குவர்

## 'புனர்வாழ்வுச் சங்கம்' உதயம்

யாழ்ப்பாணம், சனி

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் தங்களுடைய ஒரு மாதச்சம்பளத்தை நனகொடையாக செலுத்துவது என்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ப. நோ. கூ. சங்க பணியாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் நலன்களைக் கவனிக்க வடபகுதி கூட்டுறவுப் பணியாளர்களாலான 'புனர்வாழ்வுச் சங்கம்' என்று இக்கூட்டத்தில் உருவாக்கப்பட்டது,

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் சிலதீர்மானங்களின் விபரம் வருமாறு!

வடபகுதி கூட்டுறவுப் பணியாளர்களாலான புனர்வாழ்வுச் சங்கம் என்ற அமைப்பின் கீழ் திட்டமிடல் நிதி சேகரித்தல், செயற்படுத்தல் தொழிற்பாடுகள் இடம் பெறும்.

ஒவ்வொரு சங்க மட்டத்திலும் பணியாளர்கள் கூடி ஐவருக்குக் குறையாத ஒரு செயற் குழுவைத் தெரிந்து செயற்படவேண்டும். அத்துடன் புனர்வாழ்வுச் சங்கத்தின் பொதுச் சபைக்கு ஐவர் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படவேண்டும்.

ஒருமாதச் சம்பளத்தை முற்பணமாக பணியாளர்களின் சம்மதத்தோடு இந்நிதிக்கு வழங்கி அம்முற்பணத்தை பத்து மாதங்களுக்கு குறையாத தடவைக் கட்டணங்களாகச் சம்பளத்திலிருந்து அறவாக்க உதவ வேண்டுமென ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தினதும் இயக்குனர் சபையைக் கேட்டுக் கொள்வது.

பொதுச் சபையால் அங்கீகரிக்கப்படும் நிவாரணத் திட்டத்திற்கே சேகரிக்கப்படும் நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

மேற்படி கூட்டத்தில் அமைக்கப்பட்ட வடபகுதி கூட்டுறவுப் பணியாளர்கள் 'புனர்வாழ்வுச்சங்க'' உறுப்பினர்கள் விபரம் வருமாறு:-

தலைவராக பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. பொதுமுகாமையாளர் திரு. இ. இராஜசுந்தரப், செயலாளர்! தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. முகாமையாளர் திரு. சி. நவரத்தினம், மற்றும் உறுப்பினர்களாகப் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்க முகாமையாளர் திரு. ச. பசுபதிப்பிள்ளை உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க முகாமையாளர் திரு. சி குழந்தைவேலு, வலிகிழக்கு தென்பகுதி ப. நோ கூ. சங்க கணக்காளர் திரு செ. விநாயகமூர்த்தி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

இம்மாதம் 11-ம் திகதி நடைபெறும் மேற்படி சங்கக் கூட்டத்தில் இரு மீனவி கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும், இரு தெங்குப் பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்படுவர். (மாவி. நி. கெ-இ)

## 'சிவாகம வித்யாபூஷணம்'

யாழ்ப்பாணம், சனி

சகல சைவசமய கிரியைகளிலும் விற்பன்னராகவும், கும்பாபிஷேகங்கள், மற்றும் உற்சவங்கள் யாவும் செய்து வேதாகமங்களிலும் பாண்டித்யம் பெற்றவருமான ஊரெழு சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்களுக்கு நல்லை ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் 'சிவாகம வித்யாபூஷணம்' என்ற பட்டத்தை வழங்கினர். (அ)

## குழாய்க்கிணறுகள்

கொழும்பு, வெள்ளி

கிராமப்புறங்களில் குழாய்க கிணறுகளை அமைக்க அமெரிக்க் யுனிஸ்டர் நிறுவனம் ஐந்து கோடி அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இம்மாத நடுப்பகுதியில் கைச்சாத்திடப்படும். இவ்வுதவி மூலம் நாட்டின் பலபாகங்களில் நிலவும் நீர்ப்பற்றுக்குறையை நீக்கலாம் என வடிகால் அமைப்பு சபை உத்தியோகத்தர் தகவல் தெரிவித்துள்ளார்.

## துயர்தரும் செய்தி

தமிழறிஞரும் பரோபகார சிந்தையுடையவரும் செல்வரும் ஓய்வுபெற்ற மலாய்நாட்டு உத்தியோகத்தருமாகிய திரு. தம்பிமுத்து சிவப்பிரகாசம் கோலாலம்பூரில் உள்ள தமது இல்லத்தில் ஆகஸ்ட் 15-ந் திகதி சிவபதமெய்தினர் என்னுஞ் செய்தி அவரை அறிந்தவர்களனைவர்க்கும் ஆருத்துயரத்தை அளப்பரிய தொன்ருகும். திரு. சிவப்பிரகாசம் சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர், திரு. தம்பிமுத்து திருமதி கதிராசிப்பிள்ளை ஆகியோரின் புதல்வர். திரு. ஞானப்பிரகாசம், செல்லம்மாள், பவளக்கொடி, மனோன்மணி அம்மாள் ஆகியோரின் சகோதரர். இவரது இரண்டுமக்களுள் ஒருவர் திரு சி. சோதி 'பாரிஸ்டராய்'க் கோலாலம்பூரில்கடமையாற்றி வருகின்ருர். மற்றவர்மகள் இரத்தினேஸ்வரி ஒய்வு பெற்ற செய்தி உத்தியோகத்தர் திரு. மகாதேவாவின் மனைவியாவர் திரு. சிவப்பிரகாசம் யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியா சென்று உயர்ந்த பதவிகளை வகித்து அங்கு சிறப்போடு விளங்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

திரு. சிவப்பிரகாசம் செய்த பணிகள் பல. அவர் ஆசிய ஐக்கியதேச ஸ்தாபனத்தின் முதலாவது பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய பெரியாராவர். காசநோய்த் தடுப்புக்குரிய மலாயச் சங்கத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவர். கோலாலம்பூர் ரோட்டரிச் சங்கத்தின் அங்கத்தவர். இவ்வாறு சமூகப்பணி தேசப் பணிகளில் ஈடுபட்டுழைத்த இப்பெரியாருக்கு இவர் தம் பணிகளைப் பாராட்டி எலிசபெத் இராணியார் எம்.பி ஈ என்னும் பட்டத்தை வழங்கினுர். அன்றியும் சிலாங்கூர் சுல்தான்கள் மூவராலும் தனித்தனி பட்டங்களும் பாராட்டுக்களும் வழங்கப்பெற்றன.

இவைமட்டுமன்றி, தாம் பிறந்த ஊராகிய யாழ்ப்பாணத்தை மறந்துவிடாது இங்குள்ள பல சமயஸ்தாபனங்கள் கல்லூரிகள், தேவாலயங்களுக்கும் பணிகள் பல புரிந்துள்ளார். சேர். பொன் இராமநாதன் அவர்களிடத்தும் கொழும்புத்துறை யோக சுவாமிகளிடத்தும் பெரும் பக்திபூண்டொழுகி வந்தார்.

இப்பெரியாரின் அந்தியேட்டிக் கிரியைகள் சித்தங்கேணியிலுள்ள அவர்தம் இல்லத்தில் நடைபெற உள்ளன. இவரது ஆன்மா சாந்தியடைக

- சி சிவப்பிரகாசபிள்ளை

## அகதிகளுக்கு உதவுவதில் இளைஞர்கள்

சங்கானை, வெள்ளி

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் பொருட்டு சங்கானை பட்டின சபையின் 1,3,5,7ம் வட்டாரங்களின் இளைஞர்கள் ஒன்றிணைந்து தமது பகுதியில் சுமார் 2500 ரூபா பெறுதிவாய்ந்த புடவை 735ரூபா ரொக்கப்பணத்தையும் சேகரித்துள்ளனர்.

இவர்கள் சேகரித்த பணத்தையும் பத்து பொதி துணி வகைகளையும் சுண்டிக்குளி பரியோவான் கல்லூரி பொறுப்பாளரான வண. பிஷப் ஜே. ஜே ஞானப்பிரகாசத்திடம் கையளித்துள்ளனர்.

## விசாரணைகள் 10-30 க்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இம்மாதம் 12-ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7694
தினசரி 10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna)
Grand Release With New Projector's
Daily 10-30, 4-45, 7-15 p. m. only
EDGAR RICE BURROUH'S
At The Earth's Core
FAMILY ENTERTAINMENT

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
பெண் தெய்வம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
கணவன்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
கார்த்திகைதீபம்

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p. m.
One of the foremost Fun Films of the year.
The story of strange carrying— on at a Caravan
KENNETH WILLIAMS — ELKE SOMMER
in
"CARRY ON BEHIND"
(Color)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
எஸ் எஸ் ஆர் - சரோஜாதேவி நடித்த
தேடிவந்த செல்வம் [புதிய பிரதி]

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா நம்பியார், முத்துராமன், சோ
ஒரு தாய் மக்கள்
(புத்தம் புதிய பிரதி)

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)


## உருக்குக் கூட்டுத்தாபன ஊழியர் நிலை

யாழ்ப்பாணம், சனி

இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றி, கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தமது எதிர்கால நிலைமை குறித்து யாழ்ப்பாணத்தில் விரைவில் கூடி ஆராயவுள்ளனர்.

## உப்பு ஏற்றுமதியாகும்

கொழும்பு, வெள்ளி

இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம் 15 ஆயிரம் தொன் உப்பை வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யவிருக்கின்றது. உள்ளூர் தேவைக்கு போதிய அளவு உப்பு கையிருப்பில் இருப்பதன் காரணமாகவே இவ்வாறு உப்பு ஏற்றுமதிசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மண்சரிவில் பலியானார்

மட்டுவில், வெள்ளி

மண்சரிவினால் மண்கும்பத்துக்குள் அகப்பட்டு ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மற்றொருவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இச்சம்பவம் சாவகச்சேரியில் நடைபெற்றது.

சாவகச்சேரி புகையிரத நிலயத்துக்கு முன்னால் உள்ள மண் கும்பத்தில், நல்லமண் எடுப்பதற்காக தோண்டிக்கொண்டு போகும்போது மண்கும்பம் சரிந்து மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் வயது (40) மூச்சுத்திணறி மரணமானார். மற்றவர் அயலவரின் உதவியுடன் வெளியில் இழுக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் ஆபத்தான நிலையை தாண்டி விட்டதாக தகவல் கிடைத்துள்ளது இறந்தவர் தொடர்பாக மரண விசாரணை நடைபெறவுள்ளது.


மங்கையர் குலத்திற்கு மாறுதபெருமையை ஏற்படுத்த வருகிறாள்!

ஸ்ரீதர் யாழ்நகர்

இப்பொழுது நடைபெறுகிறது
குறிப்பிட்ட நேரத்திற்கு படக்காட்சி காண்பிக்கப்படமாட்டாது
தினசரி காலை 8-00, 11-00, பி. ப. 2-00, 5-00 மணி
இந்தியாவில் 250 நாட்களுக்குமேல் ஓடி புயல்வேக சாதனை படைத்த புதுமைச் சித்திரம்!



கலை இளவரசன்
★ சிவகுமார்
கலையரசி
★ சுஜாதா
★ ஸ்ரீகாந்த்
★ படாபட் ஜயலக்ஷ்மி
★ மணிமாலா
★ சுப்பையா
★ எம். என். ராஜம்
மற்றும் பலர் நடித்த



இசையமைப்பு: இளையராஜா

★ அன்னக்கிளி ★

# இலங்கை வங்கி ஊழியர் 12-ம் திகதி மீண்டும் கூடுவர்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் நேற்று நடைபெற்ற பாதிக்கப்பட்ட இலங்கை வங்கி ஊழியர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளாதது குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 5ந் திகதி நடைபெற்ற இவ்வூழியர்களின் கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதிகளை நேற்றைய கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் நேற்றைய கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாதது கூட்டத்தில் கண்டிக்கப்பட்டது.

மீண்டும் இம்மாதம் 12ந் திகதி தமது கூட்டமொன்றை ஆனைப்பந்தி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் நடத்துவதென்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

12ந் திகதிக் கூட்டத்தில் இலங்கை வங்கி ஊழியர்கள் அல்லாத பாதிக்கப்பட்ட ஏனைய வங்கி ஊழியர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிச்சயமாகக் கலந்துகொள்ளவேண்டுமெனத் தாய்ச் சங்கப் பிரதிநிதிகளை மீண்டும் அழைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

தாய்ச் சங்கப் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளாததால் தம்மால் எடுக்கப்படவிருந்த முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றமுடியாமற் போய்விட்டதென்று வங்கி ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## மக்கள் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸ் அத்தியட்சகர் திரு. செனிவிரத்தின, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் மற்றும் சகல உதவி அரசாங்க அதிபர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாட்டில் இடம் பெறும், சம்பவங்கள் தேசவிரோத சக்திகளினால் செய்யப்படுகின்றன வென்றும் இந்நேரத்தில் பொதுமக்களைப் பாதுகாத்து அவர்களின் உடைமைகள் பேணப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் உதவினால் நாட்டில் இச் சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியுமெனவும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. (கெ)

## கொள்ளை!

யாழ்ப்பாணம், சனி

சிகரெட் விநியோகம் செய்த மோட்டார்வாகனம் ஒன்றைத் துப்பாக்கிமுனையில்வழிமறித்த மூவர் விற்பனையாளரிடம் இருந்து 1218 ரூபாய் 57 சதத்தைக் கொள்ளையடித்ததாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அண்மையில் உள்ள மதவடியில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

பணத்தைக்கொள்ளையடித்த மூவரும் தப்பிச்சென்றுவிட்டனர்.

இது பற்றி கோப்பாய்ப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## கமிஷன் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணையோ நடவடிக்கையோ எடுத்திருந்தால் தமிழ்மக்களுக்கு இப்படியான ஒரு நிலை ஏற்பட்டிருக்கமுடியாது. தமிழ் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்திலேயே பாதுகாப்பாகக் கடமைசெய்யமுடியாத நிலை இருக்கும்போது தங்கியிருக்கும் இடத்திலோ போக்குவரத்துச் செய்யும்போதோ எப்படிப் பாதுகாப்பாக இருக்கமுடியும் என்று தெரியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதுகாலவரை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுப் பல நாட்கள் வேலைக்குச் செல்லாதிருந்த எந்த அரசாங்க ஊழியரும் எந்த அரசாங்கத்தினாலும் நீக்கஞ்செய்யப்படவில்லை. ஆனால் கடமைசெய்யமுடியாத நிலையில் வேலைக்குச் செல்லமுடியாத நிலையில் நாம் இருக்கும் போது எமது நிலையை நன்கு அவதானித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும். இந்த முடிவைக் கண்டபின்னரே நாம் வேலைக்குச் செல்வதுபற்றி ஆலோசிக்க முடியும் என்றார்.

புகையிரப்பகுதியைச்சேர்ந்த திரு. ஆறுமுகம் பேசுகையில், புத்திசாலித்தனமாக நாம் எமது உயிரைப்பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளோம். அரச ஊழியர்களுக்கே இவ்விதம் நடக்க அரசு பார்த்துக்கொண்டிருக்காது உரிய நடவடிக்கை எடுக்க நாம்பாடுபடவேண்டும் என்றார். இலங்கை வங்கியைச் சேர்ந்த திரு. கணேசேந்திரன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

இடப்பெயர்ந்த உத்தியோகத்தர்களது ஆகஸ்ட் மாதச் சம்பளம் உரியவர்களுக்கு அனுப்பப்படவேண்டும் என்றும்மேற்படி தீர்மானங்கள் பற்றியும் உள்ளூராட்சி அமைச்சருக்கு அவசரமாக அறிவித்தல் கொடுக்கவேண்டுமென்ற தீர்மானப்படி தந்திகள் மூலம் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டன.

தமிழர்நலன்புரிச்சங்கத்தின்

## முதலாவது தொழிற்சாலையில் அறுவருக்கு வேலைவாய்ப்பு

வண்ணார்பண்ணை, வெள்ளி

வேலையற்ற வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்வகையில் பொதுமக்கள் தொழிற்சாலைகளை அமைத்துவரும் தமிழர் நலன்புரி இயக்கத்தின் முதலாவது தொழிற்சாலையில் யாழ். இந்துக்கல்லூரி அகதிகள்முகாமில் இருந்த காலியைச்சேர்ந்த திரு. அன்ரனி வின்சன் பாபு என்ற இளைஞருக்கும் வேறும் ஐந்துபேருக்கும் வேலைவழங்கப்பட்டது.

நேற்று நடந்த இந்தமுதலாவது தொழிற்சாலை திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட மில்க் வைற் ஸ்தாபன அதிபர் திரு க. கனகராசா இவர்களில் இருவருக்கு நியமனப் பத்திரங்களை முதலில் கொடுத்துஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து இயக்கத்தலைவர் திரு. ஏ. எம். ஜேசுகாசன், பொதுச் செயலாளர் திரு. கே. சற்குணநாதன், கைத்தொழில்அமைப்பாளர் திரு க கணேசானந்தன், அமைப்புச் செயலாளர் திரு. செ. செல்வக்குமார் ஆகியோர் மற்றும் நியமனப்பத்திரங்களை வழங்கினர்.

கிராமந்தோறும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திதொழிற்சாலைகளை நடத்தவிருக்கும் தமிழர் நலன்புரி இயக்கம் வேலையற்ற தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும்வேலைவாய்ப்பைக் கொடுக்கப் பாடுபடுமென்று இவ்வைபவத்தில் உரையாற்றிய இயக்கத்தலைவர் சட்டத்தரணி திரு. எம். ஏ. யேசுதாசன் தெரிவித்தார்.

'மில்க்வைற்' அதிபர் திரு. க. கனகராசா பேசுகையில் எமது நாட்டில் பலவகையான மூலப்பொருட்கள் இருந்தும் அவற்றைப்பயன்படுத்தி கைத்தொழில் முயற்சியில் ஈடுபட எம்மவர்கள் பின்நிற்பது கவலைக்குரியதாகும் இந்தநிலையில் தமிழர் நலன்புரி இயக்கம் இப்பணியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது என்றார்.

திரு. கே. சி குணரத்தினம், செல்வி பி. புவனேஸ்வரி, திரு. விக்னராசா ஆகியோரும்உரையாற்றினர் சட்டத்தரணி திரு க. சற்குணநாதன் நன்றியுரை வழங்கினார்.

## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான, பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 41,432-70 சதம் கிடைத்துள்ளது இந்நிதிக்கு. பணம் செலுத்த விரும்புவர்கள் இலங்கை வர்த்தகவங்கி கணக்கு இல 3840 க்கு நேராக செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. லங்கா நேசையா அல்லது சீமாஸ் இன்டஸ்றீஸ் நிர்வாக இயக்குனர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோரிடம் வழங்கலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்துள்ள நிதி | ரூ. 36,355-41 |
| பரியோவான் தேவாலயம் சுண்டிக்குளி | 750-00 |
| ராஜன் ஹால் சிங்கப்பூர் | 1,250-00 |
| பகவான் ஸ்ரீ சத்தியசாயி சமிதி, யாழ்ப்பாணம் | 548-00 |
| திருமதி. டபிள்யு. ரி. ஐ. அழகரெத்தினம் கொழும்பு | 100-00 |
| யாழ். ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்கள் | 413-60 |
| ஊர்காவற்றுறை மக்கள் வங்கி ஊழியர்கள் | 285-00 |
| டி. ஏ. தர்மதேவா, யாழ்ப்பாணம் | 100-00 |
| ஏ. வாமதேவா, கோண்டாவில் | 150-00 |
| ஏழாலை தெற்கு ப. நோ. கூ. சங்கம் | 148-71 |
| நந்தினி சங்கரப்பிள்ளை இளவாலை | 100-00 |
| வண. ஜே. ஜே. ஞானப்பிரகாசம் சுண்டுக்குளி ஊடாக | 45-00 |
| வண. ஜே. ஏ. சர்வானத்தன், நல்லூர் ஊடாக | 785-00 |
| பெயர் குறிப்பிடாத அன்பர் ஆனைக்கோட்டை | 300-00 |
| பெயர் குறிப்பிடாத அன்பர் உரும்பிராய் | 100-00 |
| மொத்தம் ரூபா | 41430-72 |

## அணிவகுப்பில் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்படவில்லை. அடையாள அணிவகுப்பு பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அடையாள அணிவகுப்பை அடுத்து நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர்செய்யப்பட்டபோது "அவர்களைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கவேண்டுமென்றும், வேறு சில சம்பவங்கள் தொடர்பாக இது அவசியமாக இருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது"

இதை ஆட்சேபித்த சந்தேக நபர்களின் சட்டத்தரணிகள் "முறையான விண்ணப்பம் ஒன்றைப் பொலிசார் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கத் தவறிவிட்டனரெனவும், ஏற்கனவே சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் இம்மாதம் 6ந் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டனரென்றும் தெரிவித்தனர்"

இதையடுத்துச் சந்தேகநபர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட 2,000 ரூபாய்ப் பிணையில் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

1ம், 5ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். விசுவநாதனும், 2ம், 3ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும், 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி த. சோமசுந்தரமும் ஆஜரானார்கள். பொலிஸ் தரப்பில் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. சேரசிங்க, சார்ஜன்ட் திரு. மாணிக்கவாசகர் ஆகியோர் ஆஜரானார்கள்.


## மரண அறிவித்தல்

### சு. சரவணமுத்து

திரு. சுப்பிரமணியம் சரவணமுத்து சிவபதம் அடைந்துவிட்டார். இவர் முன்னைநாள் யாழ். ஆனந்தா அச்சக உரிமையாளரும், முன்னாளை இளவாலை திருமால் அச்சக முகாமையாளரும் ஆவார். இவர் திருமதி பாக்கியத்தின் அன்புக்கணவரும், திருமதி ருஜேஸ்வரி, திரு. ஸ்ரீஸ்கந்தராசா (உரிமையாளர் திருமால் அச்சகம்), திருமதி மங்கயக்கரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், செகராசசிங்கம் (Trains Controller) புகையிரத கட்டுப்பாட்டு அதிகாரி - அனுராதபுரம், துரைசிங்கம் (இறக்குமதி ஏற்றுமதி இலாகா கொழும்பு), திருமதி யோகேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், தரணிதரன், சிவசக்தி, செந்திவேல், பராசக்தி, சங்கரன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சிரூப்பர் கனகசபை J. P., காலஞ்சென்ற முன்னைநாள் பண்டத்தரிப்பு கிராம சபைத் தலைவர் நாகமுத்துப்பிள்ளை, காலஞ்சென்ற திவோடன் வோயி தோட்ட அதிகாரி தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (10-9-77) பி.ப. மூன்று மணிக்கு முள்ளானை குடும்ப மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

7039



## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச் சபை பூமிதானம் செய்யுமாறு பகிரங்க வேண்டுகோள்

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் சகோதரர்களை குடியமர்த்துவதற்கு மன்னார், கிளிநொச்சி, வவுனியா, பூநகரி, தீவுப்பகுதிகளில், பயிர்ச்செய்கை, குடியேற்ற காணிச் சொந்தக்காரரிடம் பூமிதானம் செய்யுமாறு தமிழர் புனர்வாழ்வுச் சபை கோரியுள்ளது. பூமிதானம் செய்பவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்க.

செயலகம்,
யாழ். மாநகராட்சி பொதுநூலகம்,
யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka